**பணி நியமன அலுவலரே கடவுச் சீட்டு பெற அனுமதி வழங்கலாம் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை—6.
ந.க.எண். 9019/ஆர்.2பிரிவு/இ1/2014 நாள். 30.5.2014

பொருள் அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் – அரசுப் பணி – ஆசிரியர்கள் / ஆசிரியரல்லாதோர் – நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் / ஆசிரியரல்லாதோர் – கடவுச்சீட்டு பெற/ புதுப்பிக்க தடையின்மைச் சான்று– நியமன அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது – ஆணை வெளியிடுதல் – குறித்து.

பார்வை :

1. அரசாணை எண்.288, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 4.12.87.
2. அரசாணை எண். 109, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 31.7.2006.
3. அரசாணை எண். 140, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 7.9.2006
4. அரசாணை எண். 259, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 17.12.2007
5. அரசாணை எண் 140, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 21.11.2013

பார்வை (5)ல் காணும் அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளில் விதி 24–A–க்கு திருத்தம் வெளியிடப்பட்டு, கடவுச்சீட்டு பெற/புதுப்பிக்க துறைத் தலைவருக்கு தொகுதி பி, சி மற்றுண் டி பிரிவின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை திருத்தி தொகுதி பி,சி மற்றும் டி ன் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு நியமன அலுவலரே கடவுச்சீட்டு பெற /புதுப்பிக்க தடையின்மைச் சான்று வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பார்வை (4)ல் காணும் அரசாணை எண். 259 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 17.12.2007ல் அயல்நாட்டு அலுவல் அமைச்சகத்தால் (Ministry of External Affairs) கடவுச்சீட்டு பெற/புதுப்பிக்க விண்ணப்பிக்க வேண்டிய படிவம், அடையாளச் சான்றிதழ் சார்பான விதிமுறைகள் தொகுத்து வெளியிடப்பட்டதையடுத்து, இவ்வலுவலக பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் நக.எண். 67023/ஆர்.2பிரிவு/இ3/2012 நாள். 9.2012ல் அனைத்து சார்நிலை அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அரசுப் பள்ளிகள்/ அலுவலகங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் வரை நியமன அலுவலரான மாவட்டக் கல்வி அலுவலரும், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் வரை முதன்மைக் கல்வி அலுவலர்களும் கடவுச்சீட்டு

பெற/புதுப்பிக்க தடையின்மைச் சான்று வழங்க பார்வை (5)ல் காணும் அரசாணையில் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு நியமன அலுவலரான அக்கல்வி நிறுவனத்தின் நிறுவனப் பேராளரின் அனுமதியின் அடிப்படையில், ஏற்பளிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களையே சார்தது என்பதால், அதனடிப்படையில் அரசாணை எண். 259 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள். 17.12.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தவறாது பின்பற்றி, அதில் தவறுகள் மற்றும் சுணக்கம் ஏற்படுவதை தவிர்த்து கீழ்கண்ட காவல்துறை சிறப்புப் பிரிவுக்கு அனுப்பி எவ்வித குறிப்புரையும் நிலுவையில் இல்லை எனச் சான்று பெறப்பட்ட பின்னர் கடவுச்சீட்டு பெற/புதுப்பிக்க தடையின்மைச் சான்று வழங்குமாறு தெரிவிக்கலாகிறது.

**காவல்துறை கண்காணிப்பாளர்,**
**பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை,**
**மருதம் காம்பளக்ஸ், எண்.17, போட் கிளப் சாலை,**
**சென்னை – 600 028.**

அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / ஆசிரியரல்லாத பணியாளர்கள் அனைவரும் வெளிநாடு செல்ல துறைத் தலைவரான பள்ளிக் கல்வி இயக்குநரால் மட்டுமே விடுப்பு அனுமதி வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கருத்துருக்கள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டு உரிய துறை அனுமதி பெறப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக